[2005 ஏப்ரல் 6

311—

கடல்வாழ் உணவுப் பொருள்கள்

***39295—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்கள் நலன் கருதி கடல்வாழ் உணவுப் பொருட்களை அவர்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்திடும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் நலன் கருதி, கடல்வாழ் உணவுப் பொருட்களை அவர்களிடமிருந்து அரசே கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மீனவர்கள் அதிகமாக கடலிலிருந்து மீன்பிடித்து வருகிறார்கள். பிடித்து வந்து விற்பனை செய்கிறபோது, அவர்களிடமிருந்து இடைத்தரகர்கள் மிகக் குறைந்த விலைக்கு வாங்கி, அதை அதிக இலாபத்திற்கு விற்கிறபோது, மீனவர்களுக்கு மிக அதிகமான இலாபம் கிடைக்க வாய்ப்பில்லை. எப்படி அரசாங்கம் ஊட்டியிலே தேயிலை உற்பத்தியாளர்களின் நலன் கருதி ஏல மையம் அமைத்ததோ, அதுபோன்று மாவட்ட முக்கியப் பகுதிகளிலே, மீனவர்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலே, இதுபோன்ற ஏல மையங்களை அமைத்து மீனவர் நலன் காக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் மீன்பிடி இறங்கு தளங்களை அமைத்து அதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் நல்ல முறையிலே செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே மீனவர்கள், அவர்களுடைய மீன்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே மீனவர்கள்

2005 ஏப்ரல் 6]

பயன்பெறலாம். அரசுக்கு வணிக ரீதியாக முதலீடு செய்வதற்கான அமைப்பு மீன் துறையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமிக்குப் பிறகு மீனவர்கள் கடலுக்குச் சென்று மீனை அதிகமாக பிடித்துவந்தாலும்கூட, அவற்றை விற்பனை செய்ய முடியாமல் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். அப்படி அவதிக்குள்ளாகியிருக்கிற மீனவர்களுடைய நலன் கருதி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மீன்களை எல்லாம் விற்பனை செய்வதற்கு என்ன நடவடிக்கையை எடுக்கவிருக்கிறார்கள் ? ஏனென்றால் அதற்கான ஒரு அமைப்பு இல்லையென்று அமைச்சர் கூறுகிறார். அப்படிப்பட்ட ஒரு அமைப்பை இந்தத் துறையே உருவாக்கி, பிடிக்கின்ற மீன்களை எல்லாம் உடனடியாக அந்த மீனவர்கள் விற்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை அவைக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே பதிலிலே சொல்லுகின்றபோது வணிக ரீதியாக மீன்வளத் துறை மூலமாக மீன்களை ஏற்றுமதி செய்கின்ற திட்டம் இல்லையென்பதைக் குறிப்பிட்டிருந்தேன். மீனவர்களுக்கென்று அடிப்படை வசதிகளான மீன்பிடி இறங்குதளம், மீன்பிடித் துறைமுகங்களுடைய உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குதல் போன்றவையெல்லாம் செய்வதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பாண்டிலே, திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கின்றார்கள். அதற்கென்று, பணமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்மூலமாக மீனவர்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

முற்பகல் 10–50

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் மூலமாக பால் விநியோகத்தினை ஆவின் நிறுவனம் செய்வதுபோல, இப்பொழுது கடைகளிலெல்லாம் Tin fish என்று சொல்லி, பாதுகாக்கப்பட்ட மீன்கள் வெளிநாடுகளில் இருந்து, இங்கே வந்து விற்பனைக்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றன;

விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. அதுபோல அரசாங்கமும் நம்முடைய அரசின் மூலமாக மீன்களைப் பதப்படுத்தி, டின்கள் மூலமாக விநியோகத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு முனைந்தால் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென்று தனியார்கள் முன்வருவார்களேயானால், அரசு உதவி செய்து அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்ட சுனாமி பேரலைக்குப் பிறகு, அசைவப் பிரியர்கள் தமிழகத்திலே பெரும்பாலும் மீனை வாங்கி உண்ணுவதிலே தயக்கம் காட்டுகிறார்கள். மனித உடல்களை மீன்கள் சாப்பிட்டதனுடைய விளைவாக தொற்று நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது என்கின்ற அச்ச உணர்வு பலரிடத்திலே இருக்கிறது. அதற்கு மாறாக ஆடு, கோழிகளை சாப்பிடக்கூடிய ஒரு நிலைமை தமிழகத்திலே பரவலாக இருக்கிறது. ஆக அந்த அச்ச நிலையைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி பேரலைக்குப் பிறகு, மீன் உணவை சாப்பிடுவதற்கு பயப்படுகிறார்கள் என்ற நிலைமையைப் போக்குவதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய முயற்சியினாலே, மீனவக் கல்லூரி மற்றும் பல நிறுவனங்களின் மூலமாக ஆய்வுகளெல்லாம் நடத்தப்பட்டு, அந்த மீன் உணவு சாப்பிடுவதனால் எந்தவிதமான கெடுதலும் இல்லை என்பதை இந்த 2, 3 மாதங்களுக்கு முன்பாக தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள். அதனால் இந்த மீன் உணவு உண்பதால் எந்தவித ஆபத்தும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 312, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS